துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 27.10.2024 அன்று பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, திருவான்மியூர் மற்றும் வேளாங்கண்ணி கடற்கரைகளிலும் மரப்பலகையிலான அணுகு பாதை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தமைக்காக, நன்றி தெரிவித்து, இந்த மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும் என்று மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பினர் கோரிக்கை விடுத்ததையொட்டி, நேற்று (30.10.2024) முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 27.10.2024 அன்று பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, திருவான்மியூர் மற்றும் வேளாங்கண்ணி கடற்கரைகளிலும் மரப்பலகையிலான அணுகு பாதை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தமைக்காக, நன்றி தெரிவித்து, இந்த மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும் என்று மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பினர் கோரிக்கை விடுத்ததையொட்டி, நேற்று (30.10.2024) முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமை!

விருதுநகர், அக். 31 -

முத்துராமலிங்க தேவர் ஜெயந்தியை முன்னிட்டு பசும்பொன்னில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அஞ்சலி செலுத்தி விட்டு வரும் வழியில் விருதுநகர் வடக்கு மாவட்டம் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விருதுநகர் தெற்கு மாவட்டம் சார்பில் அருப்புக்கோட்டை காந்தி நகர் தெற்கு மாவட்ட செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மற்றும் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டவர்கள் சட்டமன்ற உறுப்பினர் ஏ ஆர் சீனிவாசன், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், ஒன்றிய சேர்மன் பொண்ணு தம்பி, காரியாபட்டி சேர்மன் ஆர் கே செந்தில், மந்திரிவடை கண்ணன், தங்க தமிழ்வாணன், சந்தான பாண்டியன், நகர் செயலாளர் எஸ் ஆர் எஸ் தனபாலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி பி ராசன், மாவட்ட மாநகர செயலாளர் உதயசூரியன், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே கே எஸ் எஸ் ஆர் ரமேஷ், நகர மன்ற தலைவி சுந்தர் லட்சுமி சிவப்பிரகாசம், அருப்புக்கோட்டை நகர செயலாளர் ஏ கே மணி, ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், பாலகணேசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, கே கே எஸ் எஸ் வி டி சுப்பாராஜ், செட்டிகுறிச்சி கே வி பிரபாகரன், வள்ளி குளம் கண்ணன், அமைப்பாளர் க கருணாநிதி பாண்டியன்,

சிவகாசி பகுதி செயலாளர் காளிராஜன், ஒன்றிய செயலாளர் விவேக ராஜன், ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம், சாத்தூர் கடற்கரை ராஜ், விளையாட்டு மேம்பாட்டு அணி கே ஜி ராஜகுரு, அரசு போக்குவரத்து கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் ராஜ செல்வம் மற்றும் ஆயிரக்கணக்கான கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

பெரம்பலூர் மாவட்டத்தில் விழா நடைபெறும் இடம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு!

பெரம்பலூர், அக்.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவம்பர் மாதத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு விழாவில் கலந்துகொள்ள வருகை தர உள்ளதால், நிகழ்ச்சி நடைபெற உள்ள இடம் மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் மூலம் மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளதால் நிகழ்ச்சி நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மைதானத்தில் விழாவிற்கான பந்தல் அமைய உள்ள இடம், பயனாளிகள் மற்றும் பொதுமக்களை அமர வைக்க உள்ள இடம், அவர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான வழித்தடங்களையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

போதிய அளவில் குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும், பயனாளிகள் மற்றும் பொதுமக்களை அழைத்துவரும் வாகனங்களை நிறுத்துவதற்கு முறையான இடங்களை தேர்வு செய்திட வேண்டும் என்றும், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ள திட்டங்கள், திறந்து வைக்கப்படவுள்ள திட்டங்கள், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ள விபரங்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தயார் செய்திட வேண்டும் எனவும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அப்போது, மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சுகோகுல்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ச.வைத்தியநாதன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலமுருகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திருவருள், உதவிப்பொறியாளர் கவிதா, பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன் மற்றும் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக நிர்வாகிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம்

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் பாடாலூர் சோமு. மதியழகன் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – டாக்டர் செ.வல்லபன் பங்கேற்பு!

பெரம்பலூர், அக். 31 -

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினருமான மறைந்த பாடாலூர் சோமு. மதியழகன் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பாடாலூரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதேபோல் செட்டிகுளத்தில் உள்ள சோமு.மதியழகன் உருவப்படத்திற்கு, பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையிலும் மலர்தூவி மரியாதை செய்யப்பட்டது.

இதில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், சோமு.மதியழகன் புதல்வர் பாரி மதியழகன், மாவட்ட நெசவாளர் அணி அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். அருண், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் ம.செல்வராசு,பாடாலூர் சரவணன், இரூர் புஷ்பராணி, குரூர் செல்வம், களத்தூர் கண்ணபிரான், ஒன்றிய கழக நிர்வாகிகள் தனலட்சுமி, கிருஷ்ணன், சரவணன், புகழேந்தி, சந்திரமோகன், கிளைக்கழக செயலாளர்கள் அணி பொறுப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. பேரவை நிர்வாகக் குழுக் கூட்டம்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகக்குழுக்கூட்டம் 09.11.2024 மற்றும் 10.11.2024 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி அளவில் “கலைஞரகம்” எண்.25, தியாகராயா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 17 எனும் முகவரியில் உள்ள தொ.மு.ச. பேரவை அலுவலகத்தில் பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் புதியதாக நியமிக்கப்பட்ட பேரவை நிர்வாகிகள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:பேரவைப் பொதுச்செயலாளரின் விளக்கவுரை, பேரவை நடவடிக்கைகள், கூட்டத் தலைவரால் அனுமதிக்கப்படும் இதர பிரச்சினைகள்.

மு.சண்முகம் எம்.பி.
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

இடம் : கலைஞரகம்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

பர்கூரில் புதிய உள்விளையாட்டு அரங்கம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கிருஷ்ணகிரி, அக். 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலிக் காட்சி வாயிலாக, ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்ததையடுத்து, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் .கே.எம்.சரயு அவர்கள் குத்துவிளக்கு ஏற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொளிக் காட்சி வாயிலாக, உயர்கல்வித்துறை சார்பாக, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர். சரயு ., பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் முன்னிலையில் உள் விளையாட்டு அரங்கத்தை பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கல்வி மட்டுமல்லாமல் விளையாட்டு துறையிலும் சிறந்து விளங்க, மாவட்டம் மற்றும் மாநில அளவில் செஸ் ஒலிம்பியாட் போட்டி, மண்டல அளவில் ஜீடோ போட்டிகள், வாள் சண்டை, பேட்மிட்டன், மாவட்டம் மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக, 29.10.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சிவாயிலாக, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்துள்ளார்கள். இந்த உள்விளையாட்டு அரங்கத்தில், தரைத்தளம் 1846.76 சதுர மீட்டர் பரப்பளவிலும், முதல் தளம் 548.62 சதுர மீட்டர் என மொத்தம் 2395.38 சதுர மீட்டர் (25,774.28 சதுர அடி) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் கூடைப்பந்து மைதானம் 1 எண், நெட்டிப் பந்து மைதானம் 4 எண்கள், சதுரங்க விளையாட்டு அறை 1 எண், மேசைப்பந்தாட்டம் அறை 1 எண், பயிற்சி அளிப்பவர் அறை 4 எண்கள், ஆண்களுக்கான கழிப்பறை 1 எண், பெண்களுக்கான கழிப்பறை 1 எண், உடற்பயிற்சி அறை 1 எண், சேமிப்பு அறை 1 எண், தங்குமிடம் அறை 2 எண்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர் , ரஜினி செல்வம் , பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன் , மற்றும் அன்பரசன் பேரூராட்சி தலைவர்கள் சந்தோஷ்குமார் தம்பிதுரை , அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில கைப்பந்து கழகம் நடத்தும் 22 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளும் வாலிபால் சேம்பியன்சிப் போட்டி வேலூரில் வருகின்ற நவ2 முதல் நவ 5 வரை இப்போட்டியில் கலந்து கொள்ளும் தேர்வு செய்யப்பட்ட விழுப்புரம் மாவட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும், தமிழ்நாடு வாலிபால் கழகத் தலைவருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். கைப்பந்து கழக மாவட்ட செயலாளர் வாலிபால் மணி, நிர்வாகிகள் காளிதாஸ், ஜோதி பிரியா, சுகாசினி, போர் சியா, அசோக், சேது, அரவிந்த், ஜோதி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

பசும்பொன்தேவர் குருபூஜைக்குச் செல்லும் வழியில் தமிழக முதல்வர் அவர்களுக்கு மானாமதுரையில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் .எல் .ஏ., முன்னிலையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது .இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.